23rd January 1965]

MR. SPEAKER : This matter was discussed during the last sitting of the Assembly. The hon. Member should confine himself to a particular matter and put the question. He need not go to the basic fundamental thing and give all preliminary details.

திரு. கே. ஏ. மதியழகன் : யாருடைய நிர்ப்பந்தத்தினால் இந்த 'பீரியட் ஆப் கிரேஸ்' கொடுக்கப்பட்டது? அந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வளவு கணக்குகள் காட்டப்பட்டன? அந்தக் கணக்குகள் பற்றிய விவரங்களை நம்முடைய சபைக்குக் கூறுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எந்த விதமான நிர்ப்பந்தமும் கிடையாது. வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்கள், சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ்-ல் இருக்கிறவர்கள் நாங்கள் தலையிட்டு நல்ல முறையில் சர்க்காருக்குச் சேர வேண்டிய தொகைகளை எல்லாம் சேர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது நியாயமென்று ஒத்துக் கொண்டு அவகாசம் கொடுத்தோம். அவகாசம் கொடுத்த காலத்தில் போதிய அளவு வரி டிஸ்க்ளோசர்ஸ் வரவில்லை. அப்போது வரி டிஸ்க்ளோசர்ஸ் எவ்வளவு என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ப. உ. சண்முகம் : அந்த இரண்டு மாத கால தவணை முடிந்த பிறகு இப்போது புதிதாக எத்தனை இடத்தில் கணக்குகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன? அந்த இரண்டு மாத காலத்தில் எவ்வளவு பேர் கணக்குக் காட்டியிருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு மாத காலத்தில் சில கணக்குகள் வந்தன என்று சொன்னேன். தனியாகக் கேள்வி கேட்டால் புள்ளி விவரம் கொடுக்க முடியும். தவணை முடிந்த பிறகு சோதனை நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : சில இடங்களில் கணக்குகளைப் பறிமுதல் செய்ததோடு இரும்புப் பெட்டியில் இருக்கும் பணத்தையும் பறிமுதல் செய்து இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தொகை எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பணத்தைப் பறிமுதல் செய்வது மத்திய சர்க்கார் நடவடிக்கையாக இருக்க வேண்டும். நமக்கு—ராஜ்ய சர்க்காருக்கு—சேல்ஸ்டாக்ஸ் சட்டப்படி எந்தப் பணத்தையும் பறிமுதல் செய்ய அதிகாரம் இல்லை.

* 89 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து ஆக்ஸ்ட் திங்கள் வரை விற்பனை வரி செலுத்தாமலே ஏமாற்றி வந்தவர்களில் எத்தனை பேர் பிடிபட்டனர்?

(இ) அவைகள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

[23rd January 1965

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The number of cases of evasion of tax detected as a result of a preliminary check of secret accounts unearthed during the months of June, July and August 1964 are respectively 1473, 1465 and 1183.

(b) Their accounts are under scrutiny by the department.

திரு. கே. ஏ. மதியழகன்: இவற்றில் மாவட்ட வாரியாக எத்தனை கேஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்ற விவரத்தைக் கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மாத வாரியாகத்தான் கணக்கு இருக்கிறது. மாவட்ட வாரியாகத் தனியாகக் கணக்கு தேடி எடுத்துக் கொடுக்க வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விற்பனை வரிக் கணக்குகளை ஏமாற்றி குறைத்துக் காட்டுவதன் முக்கிய நோக்கம் வருமான வரிக் கணக்குகளையும் ஏமாற்ற வேண்டுமென்ற காரணத்தால்தான். ஆகவே, வருமான வரியைத் தீவிரமாக வசூலிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் கேட்டுக்கொள்வார்களா? வருமான வரி அதிகாரிகளுக்கும், விற்பனை வரி அதிகாரிகளுக்கும் இடையே ஏதாவது இணைப்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்கார் நல்ல முறையில் வருமான வரியை வசூல் செய்ய வேண்டுமென்றுதான் எப்போதும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். காரணம் என்னவென்று சொன்னால் அதிலே நமக்கு ஒரு ஷேர் இருக்கிறது. விற்பனை வரியையொட்டிச் சொல்வதில்லை. நம்மிடத்தில் ஏதாவது தகவல் கிடைத்தால் அந்தத் தகவல் மத்திய சர்க்காருக்கு உதவிகரமாக இருக்கும் என்று நினைத்தால், இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று நினைத்தால் அதை அந்த இலாகாவுக்குக் கொடுக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி: விற்பனை வரிக் கணக்குகளைக் கண்டு பிடித்து நம்முடைய அதிகாரிகள் அந்த இடத்திலேயே அபராதம் விதித்துப் பணத்தை வசூல் செய்கிறார்கள். அப்படிப் பணத்தை வசூல் செய்யும் காரணத்தால் சில தவறுகள் ஏற்பட இடம் ஏற்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால் பதில் சொல்ல முடியும். தவறுகள் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். அந்த மாதிரித் தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால் விசாரணை செய்யலாம்.

Motor Vehicles Act

* 90 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to amend the Motor Vehicles Act?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான பல்வேறு திட்டங்கள், இந்திய அரசாங்கத்தின் தீவிர ஆலோசனையில் உள்ளன.